## <u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

## <u>DVC.No.24/2026</u>

RW : 2

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 29 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நாகராஜன் | க/ பெ. | திரு. ராமச்சந்திரன் |
| கிராமம் | : | சித்தாநல்லூர் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | ஓட்டுநர் (ஓய்வு) | வயது | 80 |

**<u>முதல்விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை. நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 2 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிர்மனுதாரர் செந்தில் என் உறவினர் இல்லை. மனுதாரர் கிருத்திகாதேவி என் உறவினர் இல்லை. எதிர்மனுதாரருக்கு உடன் பிறந்த சகோதரர்கள் 5 பேரும், அவரது தாயாரும் இருக்கிறார்கள். மனுதாரர் கிருத்திகாதேவி எதற்காக மனு கொடுத்திருக்கிறார் என்றால் அவர் அப்பாவுடன் இருக்க வேண்டும் என்பதற்காக மனு கொடுத்துள்ளார். என் வீட்டிற்கும் செந்தில் வீட்டிற்கும் இடையே 100 மீட்டர் தொலைவு இருக்கும். செந்திலுக்கும், மனுதாரர் கிருத்திகாதேவிக்கும் இடையே என்ன பிரச்சனை என்று நேரடியாக தெரியுமா என்றால் சில விஷயங்கள் தெரியும், சில விஷயங்கள் தெரியாது.

நான் மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் சேர்ந்து வாழ்வதற்கு சமாதானம் செய்தேனா என்றால் செய்தேன். செந்தில் தற்போது வயல் வேலையும், டீசல் இன்ஜின் மெக்கானிக் வேலையும் பார்த்து வருகிறார். செந்தில் வெளிநாட்டில்

வேலை பார்த்தாக தெரியுமா என்றால் சிங்கப்பரில் வேலை பார்த்தார். எதிர்மனுதாரர் செந்தில் வெளிநாட்டில் வேலை பார்த்தார் ஆனால் அங்கு என்ன வேலை பார்த்தார் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க செந்தில் அழைத்து வந்தார். செந்தில் நாளது தேதிவரை நல்ல சம்பளம் பெற்று வருகிறார் என்றால் ஆமாம். செந்தில் குடியிருக்கும் வீடு அவரது கட்டியதா என்றால் அவரது அப்பா கட்டிய வீடு. அந்த வீடு செந்தில் கட்டிய வீடு என்றாலும் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் செந்தில் மது அருந்திவிட்டு மனைவியை அடிப்பார் என்றால் எப்போவது மது அருந்துவார், வாய் பேச்சை சண்டை இருக்கும் அடிக்கமாட்டார்.

மனுதாரர் கிருத்திகாதேவி எதிர்மனுதாரர் செந்தில் மது அருந்திவிட்டு அடித்து வீட்டைவிட்டு விரட்டிவிட்டார் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக பொய்யான பிரமாண வாக்குமூலம் தாக்கல்செ ய்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் பூ கட்டும் வேலை பார்ப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மனுதாரர் கிருத்திகாதேவி அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு அவரது அப்பா வீட்டிற்கு சென்றுவிடுவார் என எதிர்மனுதாரர் செந்தில் சொல்லி கொடுத்து தான் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. செந்தில் தான் கொடுமைப்படுத்தி மனைவியும், குழந்தையும் அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.29 19:16:24 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்